# நா.ம. எனும் சான்றோர்

ஆசிரியர் : எம்.இப்ராஹிம் அலாதின்

தமிழில் : ராணிமைந்தன்



# நா.ம. எனும் சான்றோர்

ஆசிரியர்

எம். இப்ரஹிம் அலாதின்

தமிழில்

- ராணிமைந்தன்

பொள்ளாச்சியில் உள்ள டாக்டர் மகாலிங்கம் பொறியியல் கல்லூரி மாணவர்களிடையே 24-1-2002 அன்று உரையாற்றினேன். எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த பெரும் தொழிலதிபரும் கல்வியாளருமான டாக்டர் என். மகாலிங்கம் விவசாய, இரசாயன மற்றும் இயந்திரத் தொழிற்சாலைகள் மூலம் தேசத்தில் எப்படிப் பணவளத்தைப் பெருக்க முடியும் என்பதை என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார். தொழிற்சாலைகளையும் கல்வி நிலையங்களையும் நிறுவுவதில் அவர் நிகழ்த்தியுள்ள சாதனைகளை அறிந்து அதிசயப்பட்ட நான், "சார், உங்களுடைய அடுத்த இலட்சியம் என்ன?" என்று கேட்டேன்.

சுமார் 80 வயதை எட்டியுள்ள ஒருவரிடம் இப்படிக் கேட்கிறோமே என்ற உணர்வுடன்தான் அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

அதற்கு டாக்டர் மகாலிங்கம் பதிலளித்தார் இப்படி : "2500 வருடங்களுக்கு முந்தைய சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட தமிழ் எழுத்துக்களை ஆராய்ச்சி செய்திருக்கிறேன். இப்போது ஐயாயிரம் வருடங்களுக்கு முந்தைய மொகஞ்சதாரோ காலத்தில் பயன்படுத்தப்பட்ட தமிழ் எழுத்துக்களை ஆராய்ச்சி செய்ய விரும்புகிறேன்".

தொலைநோக்குச் சிந்தனையாளர்களுக்கு வயது கூடுவதில்லை என்பதை அவர் கூற்று மறுபடியும் எனக்கு நினைவூட்டியது.

- ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்

எழுச்சி தீபங்கள் பக்கம் 149

அருட்செல்வர் நாச்சிமுத்து மகாலிங்கம் அவர்களை ஏறக்குறைய 50 ஆண்டுகளாக நான் அறிவேன். காந்திஜியைப் போலவே தமது வாழ்க்கையை எளிமையோடு அமைத்துக் கொண்டு நடத்திவருகிற யாராவது ஒருவர் இருக்கிறார் என்றால், எனக்குத் தெரிந்தவரையில் அவர் அருட்செல்வர்தான். தொழில்துறையில் அவர் ஒரு சாதனையாளர். அதே சமயம் மக்களுக்குத் தொண்டு செய்வதில் அதிலும் பணிவோடு அச்சேவையைச் செய்வதில் மகிழ்ச்சியடைபவர் அருட்செல்வர்.

- பாரத ரத்னா சி. சுப்பிரமணியம்

அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களை விசால மனமுள்ளவர் என்றே நான் அழைப்பேன். உன்னதமான சிந்தனையுடையவர். ஆழ்ந்த நோக்கும், உலகியலும் தெரிந்தவர். எப்போதும் தலைமுறைக்காகச் சிந்திப்பவர் டாக்டர் நா. மகாலிங்கம். அவருடைய கருத்துகள் புரட்சிகரமானவை. அறிவாளிகளையும் சிந்திக்க வைப்பவை.

- பேராசிரியர் எஸ்.வி. சிட்டிபாபு

முன்னாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்.